உ

சிவமயம்.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி.

இது,

யாழ்ப்பாணம் தென்கோவை,

ச. கந்தையபிள்ளையவர்களால் எழுதப்பெற்ற

உண்மை முத்திநிலையை ஆராய்ந்து,

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும்,

தேவகோட்டை

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச்

சித்தாந்த சாத்திர போதகருமாகிய

தூத்துக்குடி

பொ. முத்தைய பிள்ளையால்

எழுதப்பெற்று

K. CHIDAMBARANATHA ... 2 MAR 1928

தேவகோட்டை

வைசியமித்திரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரபவஸு தைமீ

உ

சிவமயம்.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி.

உண்மை முத்திநிலை யென்னும் பெயருடன் ஒரு வியாசம் யாழ்ப்பாணம் தென்கோவை, ச. கந்தையபிள்ளையவர்களாலெழுதப்பட்டு, புதுவை நந்திவெளியீட்டுமன்றத் தவரால் ஸ்ரீ குமாரதேவர் அருளிச்செய்த "சுத்தசாதக" மென்னும் நூலுடன் சேர்த்து அச்சிடப்பட்டு என் பார்வைக்கு ஒரு பிரதிவந்தது. இவ் வியாசம் பொருத்தமுள்ள சிலவற்றையும் பொருத்தமற்ற பலவற்றையும் மேற்கொண்டிருத்தலால், உண்மையறியாதார் மயங்காதவாறும், உண்மை யறிந்தோர் வருந்தாதவாறும் இவ் வியாசத்தை ஆராய்ந்து உண்மையை நிர்ணயிக்கவேண்டுவது இன்றியமையாத தாயிற்று. ஆதலின் சமயகுரவர் சந்தானகுரவர்களின் திருவடிகளைச்சிர மேற்கொண்டு ஆராயத்தொடங்குகின்றேன்.

சமயகுரவர்களைத் தத்துவப்பெரியாரென்றும், சந்தான குரவர்களை வித்துவப்பெரியாரென்றும் கூறுகின்றனர். அவ்வாறு பிரித்துக்கூறுதற்குப் பிரமாணம் ஒன்றேனும் காட்டவில்லை. அம்மட்டோ, "சமயகுரவர்முதலிய தத்துவப்பெரி

யார் அடைந்தமுத்தியைச் சந்தானகுரவர்முதலிய வித்துவப் பெரியார் அடையவில்லையென்று அறிஞர் யாவரும் ஒரே முகமாகக்கூறுகின்றார்கள். அபிமானங் காரணமாக ஒரு சிலர் இதனை மறுத்துரைப்பது அங்கீகாரமாகாது'' என்றுங் கூறுகின்றனர். அறிஞர் என்றது இக்காலத்துள்ள இவர் போன்றாரையா? முற்காலத்துள்ள பெரியாரையா? ஒருவரையாவது சுட்டிக்காட்டி இவர்முதலிய அறிஞர் யாவருமென்று எழுதாமையே இவரேயன்றி வேறெவரும் இவ்வாறு கூறவில்லையென்பதற்குச் சான்றாம்.

முத்துத்தாண்டவரைப் பிரமாணமாகக் கொண்டு "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தவரவல்லாயோ அறியேன்" என்னுந்தலைப்பின் கீழ் உள்ள கட்டையில் வைத்துச் சுட்டுவிடாதே என்பது முதலிய சிலவற்றை எடுத்துக்காட்டி "அப்பரும் லிங்கத்தடைந்தனரென்றும், ஆரூரர் வெண்கரியேறினரென்றும், செப்பரிய திருஞானசம்பந்தர் தேசுடன்சென்றாரென்றும், இப்படி யென்னை யலைத்துவிடாதே" என்பவற்றை யெடுத்துக்காட்டாமைக்குக் காரணம் யாதோ? மாணிக்கவாசகரைப்போலவே அறுபத்துமூன்று நாயன்மார்களையும் ஞானவெளியிற் கலந்தனரெனக்கூறுந் தமது கொள்கைக்குமாறுபட்டிருத்தல்பற்றி விடுத்தனர்போலும். இவ்வாறு சிலவற்றையொதுக்க எண்ணுபவர் அவரைப் பிரமாணமாகக்கொள்ளாதுவிடுதலே முறைமையாகுமென்பதை அவரறியாமையால் நமக்கு இரங்குவதேயன்றி வேறென்செய்வது.

"தத்துவப்பெரியார் திருவாக்குக்களின் பொருளை வித்துவப்பெரியார் அறிந்திலரோ எனின், ஒருவாறு அறிந்தும் சிஷ்யர்கள் பக்குவம் நோக்கிச் சமயோசிதமாகப் பொருள் கூறினரென்பதே உசிதமாகும்" என 38-வது பக்கத்திற் கூறிவிட்டு, 41, 42-வது பக்கங்களில் "எம்பெருமான் ஆவேசித்துநிற்றற்குரிய அவ்வளவுபுண்ணியம் உமாபதிசிவத்துக்கிருந்ததே யன்றி, அவர் அப்பிறப்பில் இம் முத்தியை அடைதற்கும் இதற்குரிய சாதகயோகங்களைத்தெரிந் தநுட்டித்தற்கும் பக்குவமுடையராயினரல்லர். இவற்றை அறிந்தாராயின் தாம் இயற்றிய நூல்கள் ஒன்றிலாவது இவற்றைக் குறித்திருப்பாரன்றோ" எனக்கூறுகின்றனர். ஒருவாறு அறிந்திருப்பதாக முன்னரும், அறவே அறியவில்லையென்று பின்னரும் மாறுபடக் கூறுதலோடு, உமாபதி சிவத்தைப்பற்றித் தம் மனஞ்சென்றவாறு பலபட எழுதுகின்றனர். முள்ளிச்செடிக்குச் சோதியாய் மாறுதற்குரிய பக்குவம் உமாபதி சிவத்தின் ஆத்மார்த்த பூசா மூர்த்தியின் திருமஞ்சனத்தால் நிகழ்ந்ததென்பதையும் அறிந்திலர்.

இன்னும், சந்தானகுரவர்களை குமாரசாமிப்புலவரோடு ஒருங்கு வைத்தெண்ணியிகழ்ந்து, ஆயினும் தம்மைநோக்கப் பெரியவரெனக்கூறி மகிழ்ந்து "அவ்வளவினவன்மகிழுக" என்னும் நியாயத்திற்கு இலக்கியமாயினர். சிவாநுபூதிச்செல்வராகிய சந்தான குரவர்களை யிகழ்தற்குக் காரணமாயிருந்த

இவருடைய பழைய தீவினையையும், அத்தீவினைகாரணமாக நிகழ்ந்த அஞ்சாமையினையும் எண்ணி வருந்துவதேயன்றி, தீவினை வசப்பட்டு நிற்கும் இவரைநோக்கி வருந்துதல் பயனில் செயலாகும்.

இனி வியாசத்திற்கூறப்பட்ட முத்தியைப்பற்றி [illegible]ஆராய்வாம். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் [illegible]ப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது தேவர்கட்டளையாதலால், சித்தாந்த சைவத்துக்கு வேருன சிவாத்துவித சைவராகிய ஸ்ரீ குமாரதேவர் கூறிய முத்திநிலை சைவர்களனைவராலுங் கொள்ளத் தக்கதே. அவர் கூறும் முத்திநிலையாவது:—

"மேலொரு வடிவை யெடுத்ததே யாகின் மேவு மிவ்வுடலிங்கேவீழும், மேலொரு வடிவை யெடுத்த தின்ருகின் மேவு மிவ்வுட லிங்கேவீழா, மேலொருசிவத்தைச் சீவன் சென்றடையின்மேவுமிவ் வுடலிங்குத்தானே, மேலொரு சிவத்தின் வடிவதாமருளாய் வெளியதா யுலகுகண்டிடவே.

என்பது. (சுத்தசாதகம் செ 19) இதன் கருத்து:–சீவன் சிவத்துடன் கலந்தால் தூலதேகம் பிணமாய் விழாது ஞான வெளியாய் ஆகுமென்பதாம். இந்நிலையொன்று உண்டெனக் கா[illegible]ந்த பெரியார் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளும் திருநாளைப[illegible]ார் நாயனருமாவர். இக் கருத்தினை வியாசத்

தில் எடுத்தாண்டிருப்பது பாராட்டத்தக்கது. தன் கொழுநனைத்தெய்வமெனக் கொள்ளவேண்டுமென்னும் உண்மையறிந்தகற்புடை மகளிர், ஒவ்வொருபுருடனிடத்தும் தெய்வமெனக்கொள்ளுந்தன்மை ஒவ்வொரு மகளிரை நோக்கி யிருக்குமென்னும் உண்மையினையுமறிந்து பிற புருடர்களை இகழ்தல் செய்யார். அவ்வாறு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளது உண்மையினையறிந்த இவர் சந்தான குரவர்களின் உண்மையினையும் அறிந்து போற்றியிருக்கலாம். அங்ஙனம் அறியும் பாக்கியமில்லையாயின் போற்றாதுவாளாவிருக்கலாம். இரண்டுங்கெட்டு நிந்தித்தமை வெறுக்கத்தக்கது.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளும், திருநாளைப்போவார் நாயனாரும் பெற்ற முத்திபோலவே ஏனைய நாயன்மார்கள் பெறவில்லை யென்பதை அவரவர் சரித்திரம் இனிது விளக்கும். இவ்வுண்மையை இவரும் உள்ளத்தில் வைத்துக்கொண்டு "தூலத்தோடு மறைதவில் சில வேறுபாடு காணப்படினும் அவையெல்லாம் மீண்டு வாரா நெறியே என்பதில் ஐயமில்லை" யெனக் கூறுகின்றனர். இக்கருத்தைச் சந்தான குரவர்களிடத்தும் என் கொள்ளக்கூடாது? சந்தானகுரவர்களுடைய திருமேனிகள் பிணமாய்க் கழியவில்லை. சந்தான குரவர்களின் பிற்றோன்றலாகிய திருவாவடுதுறைஆதீனத்து முதலாசிரியர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளும், தருமபுர ஆதீனத்து முதலாசிரியரும் பிராரத்த ஒழிவைத் தாமே அறிந்து

2 MAR
SHIYALI.

நிட்டை கூடினர். பிற்காலத்து வழக்கம்போல் இவர்கள் திரு மேனி சமாதியில் வைக்கப்படவில்லை. நிட்டையிலிருந்தஅந்த இடத்தையே குருபீடமாக அமைத்து அப்பீடத்தின் மேல் ஞாபகார்த்தமாக அவர்கள் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து பூசித்துவருகின்றனர். இவர்களுடைய உடலைவிட்டு உயிர் நீங்கிவிடவில்லை. பிராரத்தம் ஒழிந்தமையின் உயிரின் விருத்தி வெளியே நிகழாது உள்ளே சிவனோடு கலந்து சிவ மாய்த் திகழும் விருத்தியை உடையதாயிருந்தது. இவ்வாறு நிட்டையிலிருத்தலால் தூலதேகம் நாளடைவில் அள்ளுருக் கையாய்க் கரைந்து ஞானவெளியாக ஆகிவிடுகிறது.

ஸ்ரீ நமசிவாயதேசிகர் திருவாவடுதுறையிலெழுந்தருளி யிருந்துகொண்டு இரண்டாவது பட்டமாக சிவப்பிரகாசதேசி கருக்கு அபிஷேகஞ் செய்து உபதேசஞ் செய்தருளினர். அக்காலத்தில் சிதம்பராலய பூசைக்கு வைணவர்களாலே தடைநேர்ந்தமையை சிவப்பிரகாசதேசிகர் அறிந்து நமசிவாய மூர்த்திகளிடம் உத்தரவுபெற்றுச் சிதம்பரஞ்சென்று அரச ரை வசப்படுத்தி ஆலய பூசையைச் சிறப்பாக நடக்கும்படி செய்து நிட்டையில் வீற்றிருந்தனர். பின்னர் நமசிவாய மூர்த்திகள் திருவாவடுதுறையிலே அவ்தரித்து அதிதீவிரத ரபக்குவராயிருந்த மறைஞானதேசிகருக்கு உபதேசஞ்செய் தருளினர். மறைஞானதேசிகர் உபதேசங்கேட்ட மாத்தி ரையே காவிரிக்கரையை அடைந்து சிந்தித்துத் தெளிந்து

தைலதாரைபோல் இடையறாது நிட்டையில் வீற்றிருந்தரு ளினர். இவர் புறத்துச்செல்லும் விருத்தியின்றி நிட்டையில் வீற்றிருந்தமையை அறிந்த நமசிவாயமூர்த்திகள், பரம்பரை யாக் சித்தாந்தோபதேசம் விளங்கிவரத் திருவுளங்கொண்டு இருவருக்கு உபதேசஞ்செய்துவைத்தால் ஒருவர்சதாநிட்டை கூடிவிட்டாலும் மற்றவர் பரம்பரையை விருத்திசெய்வா ரென்றெண்ணி அம்பலவாணதேசிகருக்கும், தக்ஷிணாமூர்த்தி தேசிகருக்கும் உபதேசித்தருளினர். இவ்வாறு பின்னவரா கிய நமசிவாயமூர்த்திகளும் அவர் அருளுபதேசம் பெற்றவர் களுமே உடல் பிணமாய் விழாமல் நிட்டையில் வீற்றிருப்பரா யின், முன்னவராகிய மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்கள் உடலினின்றும் உயிர் பிரியாது உள்ளே இயங்கிக் கொண்டிருக்கும் நிட்டையில் வீற்றிருந்தனரென்பது சொல் லாமலே அமையும். இவ்வாறு நிட்டைகூடும் முறை பிற்கா லத்தில் எக்காரணத்தாலோ மாறிவிட்டமையால் ஆதீன பீடங்களில் வீற்றிருக்குங் குருமூர்த்திகளின் உடல்கள் பிண மாய்விழ உயிர் அவ்வுடலை விட்டுப்பிரிந்து விடுகிறது. இயல் பாகவே நிட்டையில் வீற்றிருந்தவர்களுடைய உடலை அந்த இடத்திலேயே மூடிவைத்துப் பூசிப்பதுபோல, பிணவுடலை வேறிடத்திற்கொண்டுபோய் மூடிவைத்துப் பூசிக்கு முறை வழக்கத்தில் வந்துவிட்டது. இதைக்கண்டு உண்மையில் நிட் டையில் வீற்றிருந்த சந்தான குரவர்களை உடல் பிணமாய் விழப்பெற்றவராக எண்ணுதல் பாவம்! பாவம்!!

இன்னும் திருச்சிற்றம்பலநாடிகள் பிராரத்த ஒழிவை முன்னுணர்ந்து தம்முடைய மாணுக்கர்களை நிட்டையில் வீற்றிருக்கச்செய்து அவர்களின் நடுவில் தாம் நிட்டையில் வீற்றிருந்தருளினர். உடனே அந்த இடத்தில் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது. அது சமயம் வெளியேசென்றிருந்த ஒரு மாணவர் இச்செய்தியை அறிந்து ஓடிவந்து குருசந்நிதியில் வீழ்ந்தலற சிவலிங்கத்தின் வழியாய் ஆசிரியர் தமது கையை நீட்டி அழைத்துத் தம்முடன் சேர்த்துக் கொண்டனர்.

பட்டினத்தடிகள் திருவொற்றியூரில் தாமே சமாதியில் வீற்றிருக்கவில்லையா? இவருடல் பிணமாய் விழுந்ததாகச் சரித்திரம் உண்டா?

இன்னும் இவைபோன்ற சரித்திரங்கள் பலவுள. இவற்றின் உண்மைகளை ஊன்றி நோக்குவார்க்கு மீண்டு பிறவியடையாமையே உண்மை முத்திநிலையென்பது நன்கு விளங்கும். மீண்டுவாராநெறியைப்பற்றிச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுவனவற்றுள் சிலவற்றை யிங்குக் காட்டுகிறேன்.

## சிவஞானபோதம்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலான் பாதத்தை யுற்று.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்.

வமென்னு மந்ததர சிந்தைநேர் நோக்கப்
பின்றும்.

## சிவஞானசித்தியார்.

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
    செனனமொன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
    மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
    மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
    பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி.

புவமகல வுடனுகி நின்றுகொள்வன்.

பின்புகாயஞ் சோராத வகைதானுந் தேயுமன்றே.

## சிவப்பிரகாசம்.

மற்றது பகல்விளக்கின் மாய்ந்திட வருவ துண்டேற்
பெற்றிடு மதனை மாயப் பிறப்பினை யறுக்கலாமே.

## போற்றிப்பஃறொடை.

பிறவி வழக்கறுக்க நின்ற நிருத்தநிலை போற்றி.
கள்ளவினை வென்று பிறப்பறுக்க.

## நெஞ்சுவிடுதூது.

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனி.

கருவேடங் கட்டுமுருக் கட்டறுத்தான்
தொண்ணூற் றறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான்.
கண்ணூறு தேனமிர்தங் காட்டினான்.
கள்ளமறப்பித்தான் மெஞ்ஞான மாக்கி மனமெல்லாம்
சிறப்பித்தான் என்பிறவி யீர்த்தான்.

இன்னும் பல திருவாக்குக்கள் உள்ளன. விரிவஞ்சி அவற்றைவிடுக்கின்றும். உண்மை கடைப்பிடித்துச் சமயகுரவர் சந்தானகுரவர்களின் திருவடிகளைப் போற்றிச் சிவபெருமான் திருவருளைப்பெற்று வாழ்வார்களாக.

சுபம்! சுபம்!!

# அறிவிப்பு.

இப்புத்தகம் விலை அணு ஒன்று.

வேண்டுவோர் ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| சிவஞானசித்தியார் சுபக்கம்மூலமும் பொழிப்புரையும், இரண்டாம் பதிப்பு. தத்துவப்படம், தாத்துவிகப்படங்களுடன் விலை | ரூ. 2—8—0 |
| சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் | ரூ. 3—8—0 |
| சருவஞானோத்தர ஆகமம். ஞானபாதம், தமிழ் மூலமும், முத்திரத்தின விருத்தி உரையும், வடமொழி மூலத்துடன் | ரூ. 1—8—0 |
| தசகாரியவிளக்கம் | ரூ. 0—8—0 |

## சிவாகம சங்கப் பதிப்பு.

| | |
|---|---|
| சிவார்ச்சனு சந்திரிகை. (நாகரம்) | ரூ. 1—0—0 |
| ௸ (தமிழ் மொழிபெயர்ப்பு.) | ரூ. 1—8—0 |
| அஷ்டப்பிரகரணம் (நாகரம்) | ரூ. 2—8—0 |
| ௸ (தமிழ் மொழிபெயர்ப்பு.) | ரூ. 3—0—0 |
| சைவபூஷணம். கிரந்த மூலமும் தமிழுரையும் | ரூ. 1—0—0 |
| சம்பு பூசாவிதி (கிரந்தம்) | ரூ. 0—6—0 |
| மதங்கப் வித்தியாபாதம். (நாகரம்) | ரூ. 1—0—0 |
| சைவசித்தாந்த பரிபாஷை (நாகரம்) | ரூ. 0—8—0 |

தபாற் செலவு வேறு.

போ. முத்தைய பிள்ளை

சிவாகமசங்கம், தேவகோட்டை.